தராகுதபதாதிசேனை திரளனியுண்டாயவாழுவன். (௱௨௧)

அரவமுமறையோர்கூட வலனுகேந்திரமாயநிற்கப்
புரமதாயிருந்தவீட்டார் கேந்திரமாகிலன்றி
அரசனுமதியுதித்தோ ராகிலுங்கேந்திரமாகிற்
பரமதாய்ச்சொல்வாய்மாதே பாக்கியயோகமென்றே. (௱௨௨)

மறையோர்கேந்திரகோணத்தார் மதிபினிடத்தானுதித்தோனும்
குறையொன்றில்லாச்சகப்படியுங் கொடுக்கும்யோகம்பாம்பாரும்
அறையுற்றிருக்கும்பாம்பினுக்கு வவர்கேந்திரகோணமாகில்
இறையொத்திருக்குமாயோகம் பெலக்குஞ்சிவிகைமாவுடனே. (௱௨௩)

மூடவனூர்க்கிரகநெட்டின் மூனியிறைபுதனிருக்க
விடையிருந்தல்விடத்துக் கதிர்சுன்சேயாநெட்டாகிற்
(மு)டையுடன்செங்கோலுண்டு கொத்தளக்கரிமாசேகம்
படைகண்டுருழ்வனென்று புண்ணியவியாழஞ்சொன்னூர். (௱௨௪)

உடாத்ததுவியாழங்கொஞ்சங் திட்டமுமசேகமுண்டு
திருத்திலிலறியவேண்டிச செகமெலாமுனைக்குநீதி
உரைாத்திடவல்லோர்க்கெல்லா முவப்பொருளல்லமந்திரி
விளைத்தனுவிளையுந்தப்பா திருக்குமேயோகதிட்டம். (௱௨௫)

மகமேருகிரியில்வாழு மலரவன்பதிக்குரைத்த
புககலியதிலுதித்த வுபமதுதெரியாதார்க்கும்
மிகயோகசுகபோகங்கள மேதினியுள்ளபேர்க்குச்
சுக்மாகத்திலுங்காணக் சொன்னசொற்கேளாய்மாதே. (௱௨௬)

அங்கொருமொழியைக்கொண்டு வகஸ்தியர்தமிழாற்செய்து
விந்திபருவதத்து மேலிடங்கிழ்தெற்கோர்க்கு
எங்கொருவருமேகாண வியம்பினவசனம்பற்றி
இங்கொருகுறிபைச்சொல்ல விடையூறுவொருவதில்லை. (௱௨

செனித்ததுகிரககூட்டஞ் சேர்ந்தநேமுதலாய்க்கொண்டு
அனைத்திவர்விளையமட்டி லவரவரிருப்பறிந்து
இனித்திருந்தவைக்கண்டு விடார்குறிசுகமுஞ்சொல்ல
இனிச்சுகஞ்சுங்கனுரு மியம்பியவசனந்தப்பா (௱௨

உதையாதியதற்குமேழுக் கொருபக்கநான்குபேரும்
சிதையாமன்மற்றோரான்கு பேருமோர்பக்கமாக
இதமாகவிருந்தாராகி லிவனுக்கேராஜயோகம்
மிதமிலாதிருப்பன்மேலாய் மேதினியுள்ளோர்க்கெல்லாம் (௩௨௯)

பிறைநின்றவிடத்துக்கேழுக் கொருபக்கநாலுபேரும்
நிறையன்றிநாலுபேர்மற் றொருபக்கநின்றாராகிக்
குறைவன்றிராஜயோகங் கொடுப்பரோமிதமில்லாமல்
அறைவில்லைநிஜமேயுண்டா மம்புலிக்கனையமாதே. (௩௩௰)

சந்திரனிருந்தவிட்டா னிருந்தவரதற்கேழ்மந்திரி
வந்தொருநாலிற்பாம்பு வலமிடமற்றோர்நிற்க
இந்திரப்பதிபோல்வாழ்வ னிவனுக்கேராஜயோகம்
கொந்தலர்குழலினளே குவலயமெங்குமாள்வன்.

உதித்தவனிருப்பிடத்துக் கோர்மதியிடத்தானேழாய்க்
கதித்தவர்நின்றிடத்துக் கிருபக்கமற்றோராகப்
பதித்தவர்பாங்காய்நின்றாற் பாராளயோகமுண்டு
மதித்தொருவரையும்பாரா ராயினுஞ்செகமேயாள்வன்.

சுங்கனுராகினமந்திரி யாகினுஞ்சுபமாய்நிற்க
அங்கவரிடத்துக்கேழுக் கிருபக்கமற்றோராகில்
எங்கணுமில்லாயோக மிவனுக்கேகொடுப்பாகண்டாய்
செங்கரும்பனையமாதே ஜெகமெலாமாளவல்லன்.

பாம்புடனொருவன்சேர விருபுரமற்றோர்நிற்க
விம்புடனுலகமெல்லாம விண்ணதிராளும்யோகம்
சோம்பலில்கெஜங்கள்கோடி துரகதங்கோடிசூழும்
காம்பிளமுலையினளே கண்டிடுமிதுதப்பாதே.

அன்புள்ளவரசனிற்க வம்மனைக்கேழிற்புத்தி
நின்றிடமற்றோரொண்டு புரமதாய்நிற்கத்தானும்
பண்புளோனுகிராஜர் பரவுறவநேகங்கோடி
நன்றுளமன்னனுகி நாடெலாமரசேயாள்வன். (௩௩௫)

சுக்கிரனிருந்தவிட்டான் சுந்திரன்மகனுக்கேழில்
நிற்கவிங்கிவர்க்குமற்றோ ரிருபுரநின்றாகில
மெய்க்குறவாகிராஜ யோகமேயுளதாமேக
சுக்கிரமாகவாழ்வன் சரசசங்கீதபோகி. (௩௩௬)

அரசனோடரவிற்க வம்பனோரேழெட்டிற்
சரசமாயிரண்டுவிட்டிற் சரியதாய்நின்றாராகில்
பரிசையோடநேகங்கோடி பரியுடன்கரியுமுண்டு
அரசியன்மாதேகேளா யரசாள்யோகமுண்டே. (௱௩௭)

மதனின்றவிடத்துநாள்கே ழெட்டினின்மற்றோர்நிற்க
விதம்போறதில்லையோகம் வேண்டியசிவிகையுண்டு
சிதனுமிந்தடைவேயாகிற் செல்வமுங்கரிமாவுண்டு
புத்னுக்கிப்படியேயாகும் பொற்சிங்காதனக்காணுண்டே. (௱௩௮)

இன்னம்ஒரு அடைவு.

செனித்தவர்க்கேழ்நாலெட்டிற் சேர்ந்துமுன்னிடத்தினிற்கத்
தனித்தொருநாளுநில்லான் றனைசோடியமகோணத்தின்
தொனித்தவனரசேயாள்வன் றேன்றியமுநலாய்க்கொண்டு
முனித்தவர்சொன்னநீதிமொழிதப்பாதிருக்குமாதே. (௱௩௯)

பனைத்தொருவிடத்திலைந்து பேருமேகூடிநிற்க
இணைத்திருவில்லாமற்றோ ரெங்கனுமொருவராகில்
அணைத்தொருபரிதிசூழ்ந்த ஜெகமெலாமாளும்யோகம்
கணக்கொருமிதமில்லாமற் கண்டிடுங்கரியநேகம். (௱௪௰)

இருந்திடநாலுபேரு மினியவர்கூடநிற்கப்
பொருந்தியமற்றபேர்க ளிவர்க்குநாலாகிநின்றால்
அருங்கடல்சூழுகின்ற வவனியேயாளவல்லன்
நெருங்கிடவநேகங்கோடி நிறகவேயரசேயாள்வன் (௱௪௧)

ஒருவிடமூன்றுபேரு மொருநான்கிலோரிரோரும்
இருந்திடவதற்குநாலி லினியவர்மூவர்நின்றாற்
பொருந்தியகுடைக்கீழாளவன் போகதேவேந்திரனாகிக்
குருந்தடியிருந்தமாதே கொடுப்பதிப்படியாம்யோகம். (௱௪௨)

ஒவொருகிரகமாகி யொருநான்கினின்றாராகிற்
சீர்பதம்பெற்றுசெல்வஞ் செகச்சக்கிரவர்த்தியாவன்
ஈரிருகிரகமாக விந்தடைவாகிநின்றாற்
பார்பெருஞ்செல்வமுண்டு பாக்கியராஜயோகம். (௱௪

ஆறுபேர்கூடிநிற்க வதற்குநான்மற்றோர்நிற்க
மீறுமட்டொன்றில்வாமல் வொரிலொளிதேசமெல்லாம்
பேருகொண்டுலகமெங்கும் பெருள்ளராஜனாகி
நூறுமட்டிலகையாண்டு நன்பனுமிருப்பன்மாதே. (௱௪

அரசிடமாகநின்ற வவ்விடம்வலத்தினல்ல
டரமுடன்சுங்கன்சோம னெளிமதிநின்றவிட்டான்
திரமுட னுதையத்தானுஞ் சேர்ந்திருபுறமாய்நின்றல்
முரசிடவநேகங்கோடி முன்னிற்கும்ராஜயோகம். (௩௪௫)

அஞ்சவனரசன்சேர வவர்க்குமிந்தடைவேயாகில்
மிஞ்சிடும்ராஜயோக மிதமிலாச்சிவிகையுண்டு
பஞ்சவர்க்கரசனேழிற் பற்றிலிந்தடைவேயானால்
நஞ்சுதின்றவனைப்போல நாடெலாமாள்வன்மாதே. (௩௪௬)

அஞ்சவற்கரசனலா யவர்க்குமிந்தடைவேயாகில்
வஞ்சியேராஜயோகம் வருவதுநிஜமாயுண்டு
விஞ்சியேழவிரோரு மிதைத்தேழுமைந்தாய்நின்றாற்
செஞ்சடைச்சிவனேயாகிச் செகமெலாமரசேயாள்வன். (௩௪௭)

அரவுடனரசனிற்க வவர்க்குமிந்தடைவேயாகிற்
குறைவில்லாராஜயோகங் கொடுப்பரோமிதமில்லாமல்
திரளுடன்யானைக்கூட்டந் தேடருஞ்சிவிகைமாவும்
அரசுடனநேகங்கோடி யவனுக்கேயுண்டுமாதே. (௩௪

அஞ்சவனரசன்சோம னந்தணன்மறிவிட்டானும்
மிஞ்சியேமரவம்வேறேன் மிகைத்துமிந்தடைவேயாகிற
கொஞ்சியராஜயோகங் கொடுப்பரிப்படியேகண்டாய
வஞ்சியேயிந்தயோகம் வருமுயர்கங்களேதி. (௩௪

அரசன்றனிலக்கினத்தானல்வெள்ளிமதியும்விட்டான்
முரசதிரிடத்தான்மொண்டு மும்மூன்றுபேருநல்லோர்
பாவிதானிருக்கிற்கேந்திர கோணமாய்க்கூடிப்பார்க்கில்
நரபதியானைமாவு நாடாளயோகமுண்டே. (௩௫

பனிரண்டுவிடத்தினல்லோ ரிடமதிற்பனைத்துக்கூடி
அணைவுண்டுமற்றோர்கிற்கு மம்மனைக்கொருவராக
இனிகண்டுகூடிமொண்டு பேருமாய்நின்றாராகிற்
குதிகொண்டசெல்வமுண்டு கொத்தளக்கானையுண்டே. (௩௫௧)

எந்தவிடாகிலைஐ மிடமதிலிருந்துபேராய்
அந்தமாயநின்றாகி லவனுக்கேயோகமுண்டு
இந்தடைவாகிவின்றே ரிவரிவர்க்கைந்திருக்கிற்
செந்திருமாதேகேளாய் ஜெகத்புகழ்மன்னனாவான். (௩௫௨)

கூட்டமாயைந்துபேருங் கூடியவிடத்தின்மற்றோர்
தேட்டமாயொருவராகத் திரண்டிரண்டாகிநிற்க
வாட்டமில்லாமன்மூன்றோ ராகினும்வருமேயோகம்
சேட்டமாயுலகையாண்டு செங்கோலுக்கதிபனவன். (௫௩)

அஞ்சுநால்பேருங்கூட வவர்க்குமேபகையுமில்லை
கொஞ்சியேயைந்தைந்தாகி லிவர்க்கொருபகையுமில்லை
வஞ்சியேயமிர்தம்போலப் பலனதுகொடுப்பர்கண்டாய்
வஞ்சியின்கொடியனுளே மகராஜயோகமென்னே. (௫௪)

அணியோட்டுங்கேந்திரகோண மமர்ந்தவரிருந்தாராகிற்
பிணியோட்டுங்கிரகதோஷம் பிடிப்பதுமில்லைகண்டாய்
மணியோட்டுமரவம்விரி மண்டலாதிபமேசெய்யும்
எணியோட்டுங்கிரகதோஷ மில்லையென்றுரைப்பாய்மாதே (௫௫)

நாட்டமாயோகஞ்செல்வ நாகெஜவசுவயோகம்
ஓட்டமாய்வருவதற்கிங் குபமதுகேளாய்மாதே
கூட்டமுமணியுங்கேந்திர கோணமாய்நின்றாராகிற்
சேட்டமேயுடையோராகிச் செகமெலாமாள்வன்றானே. (௫௬)

அஞ்சிடமஞ்சுபேரா யரசுக்கிலாபமாக
மிஞ்சினோர்காலினிற்க வரசுடனரவமின்றால்
வஞ்சியேராஜயோகம் வருமதுநிஜமேகண்டாய்
கஞ்சமாய்வேணசெல்வந் தழைத்துடனிருப்பன்மாதே. (௫௭)

அந்தணனவேதமூர்த்தி யவ்வெள்ளிசொன்னநீதி
சந்தேகமில்லையோகந் தப்பாதுசெனித்தோர்க்கெல்லாம்
இந்துணர்வாகப்பார்த்தோ ரியம்பியவசனந்தப்பா
புந்தியுற்றிருப்பர்மாதே பூமியிலநேககாலம். (௫௮)

அந்தணன்மந்திரிசோம னவனிருந்திடும்வீட்டானும்
உந்தொருவுதையத்தானு மோங்கியேயரவவீட்டார்
இந்தொருநவத்தோர்நன்மை யிவர்சுபங்கொடுப்பர்மேலாய்
சுந்தரிலவரேயல்லாற் சொல்லவும்வேறேயில்லை. (௫௯

அவயோகம்.

நீலனுமிரவிசேயு நிலமதிக்கெட்டோன்பாம்பும்
மூலமாமுதையத்தெட்டோன் மூவிருவோரும்பொல்லார்
ஏலவார்குழலேகேளா யிவர்செய்யும்வாறேதென்னிற்
பாலனையுதித்திட்டாற்போல பாக்கியங்கொடுக்கமாட்டார்

ஒருவிடானகுமூன்று பெருமாய்க்கூடிநிற்க
அருகெட்டதப்பாலொன்று மிரண்டப்பாலாகிநின்றால்
திருவிடும்யோகந்தப்புஞ் செல்வமுமில்லைமைதப்பும்
குருவிடமானசங்கன் கொஞ்சியமொழிதப்பாதே. (௩௯௧)

கூட்டமாயநின்றோர்முன்பின் கூடிரண்டொருவராக
நாட்டமாய்நின்றாராகி னகர்விடும்பதிபோக்கீது
ஆட்டமாய்ச்செல்வங்குன்றிப் போமிதுயோகந்தப்பும்
சேட்டமுஞ்செல்வமில்லைச் செகத்துக்கேகடினனவன். ( )

நாலொருகிரகங்கூட நடுமனைக்குள்ளோனாக
ஏல்பிதியாமல்ரெண்டு பேருமாயெதிர்வொன்றுநிற்
பால்பெருஞ்செல்வங்குன்றிப் பாக்கியயோகந்தப்பும்
மால்பெருங்கண்ணினாளே மயங்குவனவயோகத்தால். (௩௯௩)

அஞ்சினிலிரண்டிற்பாப ராஜனுக்கேழின்மந்தன்
மிஞ்சியேசுங்கனின்ற முன்மனைபின்னேபாபர்
கொஞ்சியேபரசனின்ற வந்தற்றிலைமதியெட்டாகில்
வஞ்சியேசெல்வங்குன்றி வருமந்தயோகந்தப்பும். (௩௯௪)

அஞ்சுக்குநாலின்மைந்த னரசனுக்கேழிற்பூமன்
நஞ்சினுக்கிரவிநாலி னன்மதியினமாக
இன்சொற்கஞ்சானேகுழ விரவிபுநின்றானிற்
பஞ்சுக்குளங்கிபோலப் பறந்துடன்போமேசெல்வம். (௩௯௫)

சுங்கனாசுகமிருக்கச் சுற்றியேபகையோராக
அங்கையோராக்தோனின்ற வம்மனைக்கேழின்மந்தன்
சிங்கம்போலரசனின்ற சீர்மனைக்கேழிற்செவ்வாய்
பொங்கமாய்நின்றாராகிற் போய்விடுஞ்செல்வமெல்லாம் (௩௯௬

அஞ்சவனின்றவீட்டுக் கவ்விளையத்தில்ராஜன்
கொஞ்சமாமதிவீட்டானுங் குறுகியேவிளையமாகத்
துஞ்சமேருணைதடக்காறுங் அன்பதிக்கிராறுகில்
மிஞ்சவேயோகமில்லை மேலன்றிகிற்பன்மாதே. (௩௯௭)

ஆறுளோன்குறைந்தோனெட்டி யம்மனைக்கிராகுக
வேறுபட்டவர்க்குமந்திரி விளையமாய்நிற்கமற்றோர்
கூறுகொண்டெட்டுக்கெட்டாய்க் கூடாமனின்றாராகில்
தாறுபட்டிலக்கமெல்லாந் தூர்ச்சனயோகமாகும் (௩௯௮)

அரவமுஞ்சனியுங்கூட வந்தணிரவிசேர
உரமுடன்குங்கன்செவ்வா யொருவருக்கொருவரொட்டாய்க்
குறையுறுமதியும்புந்தி கூடியேநிற்குமாகில்
முறையுடன்போமேசெல்வமொய்குழன்மானேகேளாய் (௱௬௯

சனியுடனரசனிற்கச் சந்திரனுடனேபுந்தி
முனியுடன்பாம்புஞ்செவ்வாய் முழுகதிர்கூடிநிற்க
இனியிவர்கின்றிடத்துக் கிருப்பிடமாறெட்டாகில்
தனியனையிற்பன்யோகந் தவிர்ந்திடுந்தரித்திரயோகம். (௱௭௰)

மந்தனுஞ்செவ்வாய்கூடி மதிக்கேழில்வந்துநிற்கத்
தொந்தமாயிரவிபாம்பு தொடுத்துகாலிவர்க்கேயாக
அந்தமாய்வெள்ளிபொன்னு மமபுலிக்காறெட்டாகில்
எத்தனையாகினுந்தா னிவனுக்கேயோகமில்லை. (௱௭௧)

அனைத்திருகோணகேந்திர மமர்ந்துகாலேந்துகூட்டம்
பணைத்துமிக்கடைவேநின்றும் பாக்கியவானேயல்ல
இணைத்திருவொன்பிரண்டு மிருந்திடில்யோகமில்லை
பிணைத்துமூன்றொன்றிரண்டு மிருந்திடற்பிழைப்பேயில்லை. ()

ஒருவிடமொருவனும்மற் றொருவிடமிருபோர்நிற்கத்
திருகில்பின்னொருவனாகத் திரும்பவேமூன்றுபேரும்
அருகில்பின்னொருவனுமி லவனுககேயோகமில்லை
மருவுகண்டுரைத்தார்சங்கன் மானிடரறியவேண்டி. (௱௭௩)

சிவிகையோகம்.

சந்திரவிலக்கினுக்கி சதிர்க்கோணமுகித்திட்டாலும்
வந்தெதிர்கூடினாலும் வலமிடத்திரிகாலேந்தாய்
கொந்தலர்குழலினாளே குலவியேநின்றாகில்
இந்திரப்பதிபோல்வாழ்ந்தங் கிருப்பனேவாய்துநாறும். (௱௭௪)

இந்திரனால்வருக்கு மிடாகுறையிருக்கலாகா
அந்தொருமதியுமீன மமாருமிருக்கலாகா
வந்தொருநான்கிற்சந்திரன் வளர்ந்துசசவமிசையாகிற்
செந்துரநுதலினாளே மிகுதியாய்ச்சிவிகையுண்டே. (௱௭௫)

உதித்தலக்கினத்தான்வீற வுயர்மதியிடத்தானட்பாய்க்
கதித்திவரேழுக்கேழாய்க் கலந்துடனுலேந்தாகி
எதிர்த்துடன்குருசுங்கற்கு மிதுநிலையாகிநின்றால்
விதித்திடமுண்டுபின்பு வேண்டியசிவிகையேறும். (௱௭௬

அரசற்குஞ்சுக்கனுர்க்கு மதுருமியார்கிநிற்க
முரசொத்துமதியுங்கூடி முன்பவருடனேசேர
இரவியத்துடனேகாரி யிவருடன்சேய்பார்ப்பின்றேல்
விரசமுத்துடையமாதே வேண்டியகெஜங்களுண்டே. (௩௭௪)

ஆபுரியோகம்.

முன்ஞெத்துவரவமற்ருேர் முன்போலக்குதியாய்நிற்க
அன்பதோடாறுதேச மகண்டசாம்பிராஜ்யயோகம
கொன்ஞெத்தராஜராஜர் கூர்ந்துகைக்கூப்பிநிற்பர்
மீன்ஞெத்தவிடையிஞளே மிகயோகந்சுங்கரீதி. (௩௭௫)

சுங்கனேடரவமற்ருேர் சூழ்நின்றதுநிபோனிற்க
எங்கனுமரசர்கூட்ட மிவனையேதொடர்ந்துநிற்பர்
செங்கருவான்போற்கோடி ஜெகயோகபோகபாக்கியம்
அங்குமரசர்சூழ்வற் றவர்க்கிவன்மூர்த்தியாவன். (௩௭௬)

உதித்திடமிடத்தோன்லாப மதியுடன்தற்கிலாபம்
பதித்திடவரவம்பொன்னும் பருவெள்ளியிருந்தவிட்டச்
குதித்துடனிவர்க்கிலாபங் கூடாமந்றனியராகில்
விதித்திடவயதுநாலூய விண்ணுலகெங்குமாள்வன். (

ஆட்சிவிடதற்கிலாப மவாவர்கின்முராகிற்
காட்சிதந்தாஞர்போலக் கனசெல்வமிகுதியுண்டு
தாட்சியின்றதற்குளுச்சங் தானிருப்பாரேமாகில்
சாட்சியாயகத்தருசெல்வங் தழைத்திடுஞ்சிவிகையோகம். (

அரவமேகின்றவிட்டுக் காகும்லாபத்தின்மந்திரி
உரமுள்ளசுங்கன்பாம்புக் கொருமூன்றினிற்கத்தாறும்
சிரமதன்பாம்புக்கேழிற் செல்வனும்கின்முஞகில்
துரகதகெஜமாந்தோளி யோகமாய்ச்சொல்வர்மாதே. (

திமைமதியதற்குமற்ருேர் நிற்கவேலாபமாக
அறையதிற்கூடிநில்லா தவாக்கவர்லாபமாகக்
குறைவின்றிநின்முராகிற் கொடுப்பரேயபிர்தயோகம்
பிறையுபார்க்கஅபோற்செல்வம்பெலக்குமென்பிருகுசொன்ஞர்.

கெண்டயோகம்.

அணியிருகூட்டகேந்திர மமர்ந்திடித்திரிகோணத்தும்
துணிந்திருந்தோர்கள்பாப ராயினுஞ்சுகமேயில்லை
பணியணியிடையிஞளே பற்றுநசெல்வமுண்டு
மணியரவுள்ளேயாகின் மாண்டிடுங்குழவிதானே. (௩௮௧)

சந்திரனிருப்பிடத்துச் சரியிருபுறமாய்ப்பாபர்
முந்திபின்னிருவர்கூடி முகந்தெட்டிலரவமின்றல்
இந்திரப்பதியானலு மிறந்திடும்பாக்கியமில்லாக்
கொந்தலர்குழலினளோ குழவியுமன்றேசாமே. (ள௮௫)

உதையமிந்தடையேயாகிற் சிதையுமேகுழவிதானும்
அதையநாலுதையோனுமி யம்புவிவிட்டானும்
இதையுடனிருந்தாராகி லெமகண்டயோகமென்று
புதைபொருட்செல்வமெல்லாம் போய்விடுங்குழவிகூட. (ள௮௬)

அருக்கனார்மந்தன்சேயு மவ்விடம்பாம்புநிற்க
குருநீலன்வெள்ளிபுந்தி கூடாமலாறெட்டாகில்
இருக்கவேபாக்கியமில்லை யிவன்பிறந்தவ்விடத்திற்
செருக்களமபோலேபிள்ளை சேர்ந்திடுமெமபுரத்தே. (ள௮௭)

மந்தனும்பாம்புங்கூட மனைக்குநாலிரவிசேயும்
தொந்தமாய்நிற்கமற்றோர் சுபருமேயாறெட்டாகில்
செந்திடத்தநுவும்பாக்கியஞ் செல்வமுநாசமாகும்
பொந்திடக்கிலேசனுகிப் போகுமன்றிரவுமில்லா. (ள௮௮)

இந்திடவணியேயாக வெந்தவிடுதையமாகில்
வந்திடுந்தீம்புண்டாகும் வலமிடமாகிலுந்தான்
நொந்திடுமாட்சியுச்ச மாகிலுநோக்காடுண்டு
சிந்திடுஞ்செல்வமெல்லாஞ் செலவழிந்துயிரிழக்கும். (ள௮௯)

பார்ப்பருமசுபர்கூடிப் பத்தியேபணியாய்நிற்கக்
கார்ப்புடனுதையமந்தன் கனல்புந்திசுங்கன்கூட
நேர்ப்புடன்செவ்வாய்பாம்பு நிலவுபொன்னணியேயாகில்
சீர்ப்பெறவுதித்தகாளை செத்திடுமிரவுமில்லா. (ள௯௰)

ஆறுமீராறுக்காறி லம்புலிசனியுநிற்க
ஈறுமோராறுக்காறி லிருந்திடவிரவிபாம்பும்
ஊராலுக்காறுமூன்றி லொருவனுப்பூமனிற்கப்
பேராறுக்கேழுமன்மற்றோ ரிருந்திடிற்குழவிசாமே. (க௯௧)

ஒரெட்டிற்கெட்டிற்காரி யொருமையாய்ப்பாம்புஞ்சேர
எரெட்டிற்கெட்டில்ராஜ னிரவியும்புந்திகூட
சீரெட்டிற்கெட்டிற்சோமன் மூடிக்கேசெவ்வாய்கூட
காலெட்டிற்கெட்டிற்சுங்க னாமாய்க்குழவிசாமே. (க௯௨

இசவிக்கோரொட்டோனின்ற விம்மனையுதையமாக
அரவுக்கோரொட்டோனின்ற வம்மனையிரவியாகப்
பரவியமதிகெட்டோனும் பண்புள்ளவுதையத்தெட்டோன்
உரமுடன்சோமன்கூடி லோரிரவதனிற்சாமே. ௧௯௩

கூடியவிருவர்முன்னே கூடாமலொருவனிறகத்
தேடியவதற்குமுன்னே செப்புமோரிருவர்கிறக
நாடிமுன்னொருவனின்று னலமில்லைபிறக்தபிள்ளை
ஆடிமெதற்குமுன்னே யழுதியாமெமபுரத்தே. ௧௯௪

இங்கள்பின்முன்னிரண்டு பாபருங்கிரண்டுநிற்க
மங்கலவானேழந்த மனைக்குதான்மத்தனுக
அங்குளசுபருமற்றோர்க காறெட்டுபனிரொண்டாகில்
எங்குளமாதருவம்ச மிறக்குமேகுழவிகூட. ௧௯௫

சோமனுக்கேழிற்செவ்வாய் நாலிருபுறமும்பாபர்
ஆமெனுமலரியோடே யக்கநாலோனுங்கூடக்
காமனுக்காறின்முன்ன னுதையவானெட்டினின்றும்
சாமெனுங்குழவிமாதா சரியன்றேயிரவுமட்டில். ௧௯௬

நாலுநால்செவ்வாய்நிற்க நவெதிற்சோமன்மந்தன்
மேலுகந்தரசன்சுங்கன் மேலன்றியஸ்தமிக்கில்
ஏழுடனுதையத்தானு மிசாப்பகைவிட்டானெட்டில்
ஆலுகந்தமர்ந்தமாதே யன்னையுங்குழவிசாமே. ௧௯௭

முந்தியோருதையத்தானு முழுபிறையிடத்தனெட்டோன்
பிந்தியேசனியும்விட்டான் பெலவீனமாகநல்லோர்
வந்திருந்தன்றேற்பார்வை வலயிடத்தில்லாதாகிற்
சந்தேகமில்லைசாவு சரிபிதுவிதியம்மட்டே. ௧௯௮

எங்கொருவிட்டாராகி லேடவரவர்க்குண்டேயாகில்
அங்கொருவிடமுந்நிதாமதற்குகாரகருந்நிதே
நொக்கிருந்தனரேயாகி னேக்காமெதிகமுண்டு
செந்திருவனாயும்பற்றுஞ் செகத்துதித்தோர்கருச்சொல்லே. ()

ஒருவருக்கொருவர்கேந்திர கோணமுமணியாய்க்கூட்டம்
இருவராய்க்கூடிக்கேந்திர கோணமுமணியாய்க்கூட
திருகுளோராகிக்கேந்திர கோணமுமணியாய்நிற்க
வருவதுநன்மைதீமை வயணமியநறிந்துசொல்லே. ௨௱

காலுபோர்கூடிகேந்திர கோணமுமணியாய்க்கூட்
டேலுடன்சுங்கன்கூடி யிவர்க்குநால்கோணமாகில்
ஆலுகந்தாலுங்கூடி யிவர்க்குநாலேந்தேயாகச்
சேலுடனேழுபேருஞ் சேர்ந்திருந்தனரேயாகில். ௨௱௧

தனபதியுடையனுவன் றனலாபமதிகமுண்டு
பனையதிலசுவமுண்டு மகிழ்ச்சியுஞ்சிவிகையுண்டு
பொனின்பதிக்கதிகனாகிப் பொற்சிங்காதனமுமுண்டு
இனிப்பதமுடையோனாகி யிருபனேவயதாரும். ௨௱௨

இந்தனிகோணகேந்திர கூட்டமுமிருப்புந்தப்பி
அந்தனன்றிகைத்துநிற்க வவகேடுமுடனேயுண்டு
நொந்துடனிருப்பனூறு வயதுடன்றனிலேலாபம்
வந்திடிற்சதியேயாக வாகனயோகமில்லை. ௨௱௩

ஒருமொண்டுமொன்றுமூன்றுயொன்றுமூன்றுய்நிற்கவன்றி
இருமொன்றுமூன்றுமூன்றுக விருக்கவுமன்றிப்பின்பு
திரியொன்றுமொன்றிரண்டாயொன்றுகவிருந்தாராகில்
கெதியுண்டகஷ்டமுண்டு றின்றநாட்டுயரமுண்டே. ௨௱௪

ஒன்றுமூன்றுமூன்றிரண்டு மொன்றுமூன்றுய்நிற்கவன்றிப்
பின்னுன்றுமூன்றிரண்டு பின்னிரண்டொன்றுய்நிற்க
அன்றன்றிமூன்றுமூன்றிரண்டு மொன்றிரண்டனுகிநின்றால்
அன்றுதுஞ்செல்வமல்லா லதிகமாய்ச்செல்வமில்லை. ௨௱௫

இருக்கவேநாலவர்கூடி யதற்கிருபக்கமூவர்
நெருக்கமாய்நிற்கமற்றோர் நின்றிடவொருவராகச்
செருக்கவுஞ்செல்வமில்லை சென்மசிதனாய்நிற்பன்
பெருக்கவேயோகமில்லைப் பெலனுண்டாமாயுள்யோகம். ௨௱௬

ஒன்றிரண்டொன்றிரண்டாயோரொருவிடமாய்மற்றோர்
நின்றிடவொன்றுக்கொன்று நேரிலாதாறெட்டாகிற்
கொன்றிடுஞ்செல்வமெல்லாங் குடியதமாகச்செய்யும்
என்றுடன்சுங்கன்சொன்ன நிதுமொழிப்பாமாதே. ௨௱

ஆறிடமதினின்றுறு பேருமேயணியாய்நிற்க
வேறுமற்றோருநின்ற விடத்துக்கேயாறெட்டாகில்
நீறுபட்டதுபோற்செல்வ நில்லாமற்குடிவிட்டோட்டும்
வேறுபட்டுலகமெல்லாம் வெருண்டுடன்றிரிவன்றனே. ௨௱

ரெண்டுமொன்றென்றிரண்டு மற்றுளோரிவர்க்கிரண்டாய்க்
கொண்டுநின்றிடமுந்திதாய்க் கூறியதாய்நின்றாகிற்
கண்டிடுமேநேகங்குற்றங் கலங்கியேபொருளும்போகும்
அண்டியவிடமுந்தப்பி யவதியும்வயதுமற்பம். ௨௱௯

கூடிநின்றிடத்துமற்றோர் குறிதப்பியசரெட்டாக
ஆடியேயாட்சியுச்சமாகினுமாதேகேளாய்
தேடியசெல்வமெல்லாஞ் சிதறிடுமிடமுந்தப்பி
வாடியேபிற்பன்கண்டாய் வயதுமேயற்பமாக. ௨௱௰

உண்டிரண்டொன்றுமொன்றுமொருரெண்டுமற்றோரெட்டாய்க்
கண்டிடவாட்சியுச்சங் கருதிலாநலமானாலும்
அண்டியேபொருளுமுன்போ மவதியுங்கெடுதியுண்டு
கொண்டபோகிலைமைதப்பிக் குறியிதுவயதுமற்பம். ௨௱௰௧

செல்வராய்க்கேந்திரகோணஞ் சேர்ந்துநின்றணியுமாகில்
அல்லவராட்சியுச்ச மாகினுமாதேகேளாய்
எல்லவர்நலமானா லெட்டாறுமாகநின்றாற்
பொல்லவராகச்செல்வம் போய்விடும்வயதுமற்பம். ௨௱௰௨

மதிபதியதற்குக் கேந்திரகோணணியாகநின்றிங்
கதிபதியுச்சநட்பு மாகினுமாதேகேளாய்
பதியவர்க்கொன்றுக்கொன்று பகைத்துமாறெட்டேயாகில்
விதியதுகுறைந்துசெல்வம் வீணிலேகுலைந்துபோமே. ௨௱௰௩

ஒன்றிரண்டொன்றுமூன்று மொன்றுமாய்நிற்கக்குற்றம்
என்றுள்ளசுகமுந்தப்பி யிருப்பிடமனையுங்குற்றம்
நன்றுள்ளனுகிவாழ்ந்த நலங்குன்றிக்கஷ்டமாகி
நின்றுடன்றிரிவன்றானே நிலையிதுகுறிதப்பாதே. ௨௱௰௪

சூரியன்மந்தன்சேயைச் சூழ்ந்திருபுறத்தின்மற்றோர்
சாரியராகநிற்கச் சாவதுமுடனேயுண்டு
வீரியர்க்கிவ்வடைவேயாகில் வேண்டியயோகமுண்டு
பாரினையறிந்துகொண்டு பாருளோர்க்குரைப்பாய்மாதே. ௨௱௰௫

எட்டணியாறுமாக விருந்திடிற்செல்வமில்லை
மட்டினிலெட்டாறாக மனையவர்நின்றாராகில்
விட்டிடுமாயுளில்லா வீணிலேதனமும்போகும்
தொட்டணையாமற்செல்வந் தூரவேநிற்குமாதே. ௨௱௰௬

கெடுதியாயுதையம்பாபர் கிட்டியேநாலாறுக
அறுதியாய்நல்லோர்நிற்கு மவரவர்க்காறெட்டாகிற்
படுதியாய்பட்டாற்போலப் பறந்திடுஞ்செல்வமெல்லாம்
பிரிதியாயுதித்தக்காளே பெயர்ந்தெழுமெமபுரத்தே. ௨௱௰௭

மதியுடன்புத்திசேர மந்தனோடாசனிற்க
விதியுடனிரவிசுங்கன் வேந்தனுக்கெட்டிற்பூமன்
கதிபெறப்பாம்புகூடக் கலந்துடன்பூமனின்றால்
அதிபதியோகமில்லை யவனுக்கேவயதுமற்பம். ௨௱௰௮

செல்வமாய்க்கேந்திரகோணத் தாருமேசுகமாய்நிற்க
அல்லவென்றாட்சியுச்ச மாகிலுமேலாய்நிற்க
நல்லவராகினாலு நான்குபேர்வக்கிரமாகிற்
சொல்லவுஞ்சுகமேயில்லை தோன்றிடுமரிட்டமாதே. ௨௱௰௯

கூட்டமுமணியுமாகிக் குறைந்துநின்றவருமேலாய்த்
தேட்டமாயிருந்திட்டாலுந் திருகதிலுண்டுகண்டாய்
ஓட்டமாய்த்திரும்பின்றோ ரொருநான்குபேருமாகிற்
செட்டமேயில்லைகேளாய் சிவனுக்கழிவுமாதே. ௨௨௰

அல்லவென்றணியுங்கூட்ட மதிகேந்திரகோணமாகில்
நல்லவராகிநிற்க நான்குபேரமிசைநீசம்
செல்வவராங்கிசாதி துன்பஞ்சாஸ்தமாகில்
பொல்லவவருமேடைப் போய்விடுஞ்செல்வமெல்லாம். ௨௨௧

இன்பமாமணியுங்கேந்திர மிருந்திடிற்கூட்டங்கோணம்
அன்பதாய்நின்றாகி லதினான்குபேருநீசம்
தன்பதமாகினின்றோ ரந்திசமதுசிவாறல்
துன்பமாயாயுள்செல்வந் தொல்வதுமற்பமாமே. ௨௨௨

அல்லவோநான்குபேரு மதிபகைபாகிநிற்க
நில்லுமவ்விட்டார்தாமு நீசமூடாஸ்தமாகிற்
செல்வராயக்கேந்திரகோணஞ் சேர்ந்தணியிருந்திட்டாலும்
நல்லவர்போலநின்று நாசமேபுரிவர்மாதே. ௨௨௩

கூட்டமுமணியுமாகிக் குறைந்துநின்றவருமேலாய்த்
தேட்டமாயிருந்திட்டாலுந் திருகதிலுண்டுகண்டாய்
ஓட்டமாய்த்திரும்பின்றோ ரொருநான்குபேருமாகிற்
சேட்டமேயில்லைகேளாய் சிவனுக்கழிவுமாதே. ௨௨௪

திரட்டு

அல்லவென்றணியுங்கூட்ட மதிகேந்திரகோணமாகி
நல்லவராகிலிற்க நான்குபேரமிசைநீசம்
சொல்லிவராகிசாதி துன்பநீசாஸ்தபாகில்
பொல்லதுவருமேகூடப் போய்விடுஞ்செல்வமெல்லாம். ௨௨௫

இன்பமாயணியுங்கேந்திர மிருந்திடிற்கூட்டங்கோணம்
அன்புகாய்நின்றாரி லதினான்குபேருநீசம்
அன்பதமாகிநின்றே ரங்கிசமதுவேயானால்
துன்பமாயாயுள்செல்வஞ் சுபமதுமற்பமாமே. ௨௨௬

பிரதியோககாண்டம்-முற்றிற்று-ஆக-௨௨௬.

ஆயுள் காண்டம்.

தீர்க்காயுள்.

இப்படியகேகங்கோடி யென்றுறுணைப்பொருள்களுண்டு
மெய்ப்படச்சுங்கனாக மேதினியோர்க்குக்கிட்டா
தெப்படியென்னிற்கேளா யெடுத்தோதுமாநுமைக்குச்
சொற்படுஞ்சங்கரூட்சிச் சோதித்துச்சொல்வாய்மாதே.

சொல்லுவர்பெரியோரவ[illegible]ளாதெய்வம
அல்லொடுபகலுமாக வதினு[illegible]ண்டு
ஒல்லுமோர்வேதமூர்த்தி யுரைத்ததென்றறியலாகும்
செலனுமேதேசமெல்லாஞ் ஜெகஜ்ஜோதியாகநிற்பன். ௨

அஷ்டமவிடத்தான்மந்தன் றாட்சியிற்கூடநால்வர்
திட்டமாய்க்கூடிநின்ற திங்களுமதிலேநிற்க
நட்டமிலலாமன்மற்றோர் காலுங்காலாகிநின்றாற்
பொட்டெனவயதுண்டாகிப் போய்விடுந்தரித்திரங்கள். ௩

மந்தனும்புந்திசுங்கன் மருவிட்டானுதைய த்தோனும்
அந்தமாய்க்கூடமற்றோ ரவாக்குகாலத்தேயாகில்
தொந்தமாய்ச்செல்வமுண்டு கொண்ணூறாம்பத்தாங்கண்டு
வந்தநாண்முதலாய்க்கொண்டு வளர்ந்துடன்பாக்யமுண்டே. ௪

எட்டவன்புந்திசுங்க னிந்துவுமுதையத்தானும்
மட்டினிற்கூடிநிற்க மனையவர்க்காட்சியாகச்
சட்டெனமற்றோர்நின்ற சரியிருபுறமாய்ச்சேர்ந்தாற்
பொட்டெனவாதுண்டாகும் புகலுஞ்செல்வமுண்டே. ௫

எட்டினிலெட்டேமற்ரே ரிருபுறஞ்சரியாய்ச்சேர
இட்டிடுமநேகசெல்வ மெதிரில்லாயோகமுண்டு
விட்டிடா திருக்குநாறு விண்ணவர்க்கதிகனாகிக்
கட்டுடன்வாழ்வன்கண்டாய் கருமுகில்வண்ணன்போல. ௬

மந்தனுமாட்சியாய்மற் றவரிருபுறமாய்நிற்க
முந்தவோர்மந்தனுர்க்கு முன்மனையபிசையாக
இந்தடவாகிநின்ற விவனுக்கேவயதுநாறு
சொந்தமாய்ச்செல்வமுண்டு தொல்புவியோர்க்குமாதே. ௭

கரியிடமதனிலுன்கு பேருமாய்க்கூடிநிற்க
அரியிடமகனுங்கூட வவர்க்குநான்மற்ரோராக
எரியிடமகனுமாட்சி யபிசையிலிருந்தானாகிற்
பரியிடச்செல்வமுண்டு பார்தனில்வயதுநூறே. ௮

செங்கருநீலனின்ற சீர்மனைக்காறேமெட்டாடல்
சுங்கனும்புந்திபொன்னுஞ் சுபமதாயிருக்கமற்ரோர்
எங்கனுமிருந்தாராகி லிவனுக்கேவயதுநாறு
குங்குமமனையமாதே குயிறு[illegible]தப்பாதே. ௯

எட்டுடனெட்டுவ[illegible]சன்சுங்கன்
பொட்டெனமதியு[illegible] புருநதொருவிடத்திநின்றால்
விட்டிடா திருக்குஞ்செல்வ மேதினியிருப்பனாரும்
மட்டிலாச்செல்வமுண்டு மதகெஜதுரகயோகம். ௰

சேர்ந்திருவோருங்கூடச் சென்மகாவிடமேயாகப்
பூந்தவர்க்கொருநாலாகப் புண்ணியரிருக்கமந்தன்
சார்ந்துநின்றிடத்துநான்கிற் சுருவுபொன்சுங்கனாகில்
ஏந்துபொன்செல்வனாகி யிருப்பனேவயதுநாறாய். ௰௧

இருந்திடமந்தனேட்டே யிருவருங்கூடிநிற்கப்
பொருந்திவர்க்கைந்திற்றுகந்திற் போய்மூன்றுபேராய்நிற்கத்
தரும்விதிநாறாய்நின்று தனபாக்கியமுடையனாவன்.
செரும்பவழிதழின்மாதே செப்பினன்சுங்கன்றானே. ௰௨

மூனுபேருடனேமந்தன் முதலவனாகிநிற்கப்
பூணிரண்டொன்றாய்மற்றைப் புண்ணியர்நின்றாராகிற்
காணுமேசெல்வமிஞ்சிக் கனக்கவேவாழ்வன்மாதே
ஆணுடன்பெண்ணும்பெற்றிக் கவனூறுவயதிருப்பன். ௰௩

ஆயுள்காண்டம்.

மகரகும்பத்தின்மந்தன் மருக்கவமிசையன்றி
உயருச்சவமிசையாகி யோகியேகின்றாகில்
சிகரமொத்ததுபோற்செல்வஞ் சேர்ந்துநின்றலகில்வாழ்வன்
விபரமுற்றுடையனுகி மேதினியிருப்பனாரும். ௯௪

நீலனுமுச்சமாக நிலவுநுவாட்சியாகி
மேலெனுமரசன்சுங்க னிவர்களுமேகாலாயநின்றாற்
பால்பெருஞ்செல்வமுண்டு பாக்கியவானுமாக
ஏல்பெரும்யோகமுண்டிங் கிவனுக்கேவயதுநூறு. ௯௫

ஆமிரண்டிடத்தான்மந்த னாயுசுகொடுத்தாலுண்டாம்
ஏறுமற்றேழுபேரு மிவர்க்கவர்சுபமேயாகில்
வீறுமேயோகம்பற்றி விண்ணுளோர்களிலனுகப்
பேறுமோரதிசனுமிப் பெரியவனுள்ளாரும். ௯௬

கூடியேயிருந்திட்டாலுங் கோணமாய்நின்றிட்டாலும்
நாடியேபணியாய்நின்று நல்லுச்சவமிசையாகில்
ஓடியேவருமேயோக மொளித்துநின்றசைந்திட்டாலும்
தேடியேபிடிக்குஞ்செல்வம் திரும்பவேவயதுநாறும.

உதித்தவன்சோமன்விட்டா னேரொட்டோனிலனும்
கதித்தவனிருந்தவீட்டான் கனகனேடாதுபேரும
ஒருத்தருக்கொருத்தர்துன்ப மில்லையாயுறவேயாகில்
விதித்ததுவயதுநூறு விண்ணுளோரறியத்தானே. ௯௮

சனிக்கெட்டிற்பாபரில்லாச சவிப்பிலார்கூடப்பார்க்க
இனிமட்டிவெர்க்குகாலா மிருந்திடப்பாபரன்றி
செனித்திட்டதெட்டுக்கெட்டிற் சிதனின்றனுகிற்
செனித்திட்டுவருமோர்பாலன் சிரஞ்சீவியாகநிற்கும். ௯௯

எட்டுடனெட்டினிற்க விருபக்கஞ்சுங்கன்ராஜன்
விட்டிடனுதயனுசோமன் வெள்ளிக்கேழாமிடிற்க
மட்டுடன்சனிக்குநாலின் மண்மகனிரவியன்றி
கட்டுடனுதித்தகாலை கண்டிடாதெயபுரத்தே. ௱

விறுமோர்சனிக்குநான்கில் வெண்கதிர்புமனில்லார்
மாறுமுக்கோணர்கேந்திர மதிபுமேசகடமின்றி
ஆறுமிக்காமிரண்டோ னவன்சுகமானன்மாதே
நூறுமட்டிருப்பனென்று நவலுவர்நூல்வல்லோரே. ௱௧

நாலுசேக்திரந்துமன்னர் நலமாய்மூக்கோணத்சேர
எலுகத்திருக்குநீலே விலர்க்கேழிற்றிபோர்கிலா
மேலுகந்தனக்தொன்மீழி மேருவிலெட்டோனுறுல்
ஆலகந்தமர்ந்தமாதே யவனுமுவாசுள்ளோனும். ௨௨

கலிக்கொருவீரயில்லாக் கனலவன்பார்வையின்றி
மலிக்கொருவக்கிரமின்றி மன்னவன்பார்வையாகில்
குலிக்கிருவடனெரோமன் கூடவேயுதையகிற்கப்
பலித்தவர்க்கெட்டுக்கெட்டோன் பருநலமாகுமாதே. ௨௩

பதிமகிவிதிபுகலல பாபரங்கிசமேயாக
விதிமதியின்னியடுக்கா சிவருமேசபரோசோ
விதிமதிபதிக்கோணில் வெய்யவன்பூமனிதிற்
சதிபதிமாகேளாய் சந்திவிச்சிலேயோலாமே. ௨௪

நிலனுக்கெட்டிற்பூம் விவரமதிக்கெட்டிற்புக்தி
காலத்திராதிற்றியுங் காமனுக்கொருநால்வேந்தன்
நாலனுக்குதையமாக நோயிலாதிருந்தாராயிற்
பா[illegible]க்கொருநாளுகப் படருமேபாபுரியோலம். ௨௫

எட்டவனிருப்பிடத்துக் கிருபக்கருசுபரோகிற்க
மட்டில்லாச்சனிக்கேழ்நாளின் மன்னவன்வெள்ளிநிற்க
விட்டிடாமலையார்க்கு வெய்யவங்காதிலாகி
இட்டமாயிருக்கிற்[illegible] கிருப்பனேவைத்துநாளும். ௨௬

அற்பாயுள்.

விதிபதிச்சயின்றி வெய்யவனெட்டிப்பார்க்க
அதின்மதிசதுற்றிற்க வதற்குநால்சனியேபுக்தி
மதிபதினருநோக்கில்லா மந்தனும்வெள்ளிகூடிற்
சதிபதிமாதேகேளாய் சாவதிற்குடனேயுண்டு. ௨௭

உதையத்துக்கெட்டின்மந்த னெருமனுப்பிற்கத்தாலும்
மதியத்துக்கெட்டிற்பூமன் மன்னவர்வர்க்கொருகை
அந்தயோத்துவிரவியின்றுன் சதம்சேழ்நான்மந்தனுகில
விதியத்துவில்லாநாகி விளையுமேதிப்பாய்மாதே. ௨[illegible]

உதிக்கெட்டுக்கெட்டின்மந்த னாகனுமிசவிற்க
மதிக்கெட்டிக்கெட்டினல்ல மன்னவர்பூமன்சேரச்
சதிச்சிடிக்கள்புத்தி காணவுமில்லாதாகில்
விதிக்கெட்டொருநில்லா விளையுமேஇப்பாய்மாதே. ௨௯

அருக்கனுகெட்டோன்மந்த னமர்ந்திட்வுதையம்பூமன்
இருக்கவுமிவனைகல்லோ ரின்பமாய்ப்பாராகிற்
பருக்கவேசோமனின்றிப் பாம்புடனின்றாராகில்
உருக்கமாயுதித்தகாளை யொருநாளுமில்லாமாதே. (௩௰)

நீலனுர்தனககுநான்கி னின்யிடவாரற்றும்
கோலமாய்த்தியர்னின்ற குடிமனையதற்குநான்காய்ப்
பாலராய்ப்பிறக்கினல்லோர் பார்க்கவேகூடாராகில்
ஏலவார்குழலாய்கேளா யினியொருநாளுமில்லா. (௩௧)

ஒன்பதுபேருநின்ற நிலையதிலொருமையில்லாத்
துன்பமாயெட்டுக்கெட்டாய்த் தோன்றியேநின்றாராகில்
இன்பமாயாட்சியுச்ச மிருக்கினுந்தீமையாகும்
நன்பலங்கொடுப்பதில்லை நட்டமாயுதித்தகாளை. (௩௨)

ஆட்சியாயிருப்பிடத்துக் கவர்பின்புநால்வர்நிற்கச்
சாட்சியாய்கேந்திரகோணஞ் சரியவர்நின்றிட்டாலும்
மோட்சமுண்டேன்றுதானே மொழிகின்றவாறுதப்பாச்
சாட்சியாய்ப்போமேகாளை தனக்கிருப்பில்லைமாதே. (௩௩)

பெரியதாற்கெட்டின்மந்தன் பெரியசோமற்கேம்புந்தி
அறியவற்கெட்டிற்பாம்பு மரும்வெள்ளிக்கெட்டிற்பூமன்
நெறியதாயாட்சியுச்ச நிற்கினுஞ்சுபமேயில்லைச்
சரியதாமிடமானாலுஞ் சாவதுகிஜமேகண்டாய். (௩௪)

பறித்தவிலக்கினத்துக்கிருபக்கம்பாபர்நிற்க
மறுத்துநின்றிடிற்பலத்தின் மனையினிற்பாபியாகச்
செறித்தவர்க்கேழிற்பாபி சென்மாதிபாபியாகிற்
குறித்திவராட்சியுச்ச மாகினுங்கொடுபோங்காலன். (௩௫)

விதித்தவனீனமாக வெண்கதிரோழினிற்க
மதித்தவனஸ்தமிக்க மங்களனிவர்க்கேழாகப்
பதித்தவர்பகையேசேரப் பாஸ்கரன்மகனேழாகில்
எதிர்த்தவர்நின்றாரால் லேக்திதைமாதேகொல்வர். (௩௬)

தஞ்சமாய்கேந்திரகோணந் தனைமகனொருவனிற்க
அஞ்சுநான்முடவன்பாம்பு மவர்க்குநான்கிரவியாக
மிஞ்சியேசுபருஞ்சேர்ந்து வலமிடப்பார்வையின்றி
நஞ்சுடனுதித்தகாளை நாசமன்றிரவுதன்னில். (௩௭)

வீசுங்கதிரோனெட்டிருக்க விரையமரவுஞ்சனியிருக்கத்
தேசச்சதிரமிடமாகச் செவ்வாயொருவன்கதித்திருக்கப் [ல்
பேசும்பெரியோர்நோக்கின்றிப் பெருமைதவிர்ந்துபேதயைப்போ
ஊசக்குழவியன்றிரவி ன்டக்கும்வழிதானெமபுரத்தே. (௩௮)

ஏழோரிடத்திற்சனியிருக்க வெதிரானிடத்திலிரவியனும்
தாழ்வரம்பிறையந்தனனிடத்திற் றரணிசுதன்பாம்புடன்கூட
வாழாதின்றப்பெரியோரும் வலமிடத்தாசிலுநோக்கின்றி
விழாததன்முன்னேநடந்து வியுங்குழவியன்றிரவே. (௩௯)

நிலமகனுடையம்பாம்பு நின்றிடவிரையமந்தன்
பிலனுடனிரவியெட்டிற் பின்னேழிற்செவ்வாய்நிற்க
நலங்கொடுநல்லோர்நிற்கு நகருளோர்க்கினமாகிற்
குடிகொண்டுகண்டபோது குதிகிடுங்குழவிசீவன். (௪௰)

பிறக்கும்பொழுதேயுதையமதிற் பிலனேடாரலரவமுமே
சிறக்குமதியோடிருமந்தன் சென்மாதிக்கோர்பகையாகி
கிறக்குநல்லோர்நோக்கின்றி நிலயத்தெட்டோனஸ்தமிக்கிற்
பறக்குங்குழவியிரவுநில்லாப் பத்தாதனையும்பலரோகம். (௪௧)

பிறைதேய்ந்தெட்டிற்கரியினுடன் பெலநோக்கின்றியுதையாதி
சிறையுந்திரவியுடன்கூடிச் செவ்வாய்மதியிடத்தானுடனே
அறைபூந்தெட்டோனரவமுட னுறெட்டாகிற்கிலுமே
குறைசேர்ந்திருக்கக்கொடுங்கூற்றன் குறுகுங்குழவியிரவுநில்லா.()

பத்தாவுதையத்ததிபதியும் பருமதியிடத்தானஸ்தமிக்கப்
பெத்தார்மதியுயர்சனியுடனே பேரோடரவஞ்செவ்வாயும்
இத்தோடரவர்க்கெட்டாகிப் புண்ணியரிவரைநோக்கின்றேல்
அத்தாடியதுக்கதுமுன்னே யம்பலமாகுங்குழவியுமே. (௪௩)

குடிகொண்டநல்லோர்நிற்கக் குருமதியாறெட்டாக
மதிகொண்டுபாபர்வீறி மனைக்குநான்காகநிற்க
விதி[illegible]ண்டவிடத்தான்வீறி விரையமுன்னவனுமெட்டிற்
பதி[illegible]ண்டுநின்றாராகிற் பறந்திடுங்குழவிசீவன்.

நல்லவர்நால்வர்பாபர் நடுவதினிற்கமற்றோர்
சொல்லுதையாதிசோமன் சுகமின்றிப்பாபர்கிட்டி
நில்லதிலுதையமெட்டோ னிலையவனெட்டினின்றால்
வில்லமுத்ததிகமாதே வியுமன்றிரவுதன்னில். ௫

பழிநிலைமதியினெட்டோன் பாபருமுதையமிற்கக்
குழிமதியிடத்தான்பாபர் கூடியேமதிக்கெட்டாக
அழிவு நூல்வேதமூர்த்தி யவருமேபாராராகில்
முழிபடுங்குழவிசீவன் மூவைந்துநாழிதன்னில். (௪௬)

எட்டுடனெட்டோன்கூடி யிருபுரம்பாபியாகக்
கட்டுடனெட்டுக்கெட்டிற் கரிபரான்மிகைத்துநிற்க
மட்டுடன்வேதநூலான் மனையவர்பாராராகில்
விட்டுடன்போமேசீவன் விமுமைந்துநாழிதன்னில். (௪௭)

ஈராறெட்டோர்கேந்திரமதி லிருந்தமனையாராறெட்டிற்
சேராதவருடன்மதிபதியுஞ் சென்மத்துடனுஞ்சேர்ந்திருக்கக்
காராதுடன்வெள்ளிமந்திரியுங் கலந்தேழிரவிக்காகினுமே
ஈராறெட்டுநில்லாநிங் கிரவேகுழவியிறந்திடுமே. (௪௮)

இரவிநின்றிடமுதையமதா யீனொந்திரண்டிடங்கரிசேயாய்ப்
பரவிநின்றிட்சந்திரனும் பாம்புமவர்ககாறெட்டாகில்
அரவுபகையுானவர்க்காறி லந்தணர்நிற்கவுமதிக்கெட்டாய்க்
குறையுடனெட்டோனஸ்தமிக்கிற் குழந்தையேகுமெமபுரமே. ( )

விதியுடனிரண்டொருபாபருமே விடமதியரவமுங்கரியுடனே
மதியுடன்புத்தியுங்கரிக்காறும் மன்னவனிவர்க்காறெட்டாகில்
அதியுதைமதியவர்பகையாக வந்தணரிவரைநோக்கின்றேற்
கதிகுப்பத்துடன்கருமாண்டு கழன்றுவிடுமேகாசினியில். (௫௰)

சந்திரனிடத்தானுதையபதியுஞ் சூரியனுடனேகூடவுமே
மந்திரியெட்டோன்மதிக்கெட்டோன்மந்தனுமாறும்பார்க்கினுமே
புந்தியும்பாம்புங்கரிநாலாய்ப் பொன்வெள்ளிக்கேழினுமாகினுமே
இந்திரபதியோடாறுலு மிறந்திடுமெமபுரவழிபதுவே. (௫௧)

உத்தமனொருவர்நோக்கின்றி யுதையத்திடமதிற்பாபருமே
சத்தமவிடமதுநான்கினுமே சரிவரவாரலுமந்தனுமாய்ப்
பத்தினும்பாம்பிராவெள்ளி பாலாய்பொன்னுப்கிற்கிலுமே
செத்திட்டன்றேகுழவியுமே சேர்ந்திடுமெமபுரவழிபதுவே. (௫௨)

ஈனமாயிருக்கச்சந்திர னிராறிலிரவிபாம்புமே
தானுமோர்மதிக்கோனொட்டிற் சனியுமேயொருவனுநச
சினமேயிவர்க்குநான்கிற் செவ்வாயுநின்றுறுமில்
தேன்மொழிமாதேகேளாய் செத்திடுங்குழவியன்றே. (௫௩)

பருமதிநின்றிடத்துப் பகலவனேந்தேயாகத்
தரும்விதியொன்பதாகித் தனைமகன்மதியோடாகக்
குருபதிவினையமாகிக் கொடும்பாம்புமேழினின்றால்
வருமதுதீம்புண்டாகிக் குழவியுமன்றேமாளும். (௫௪)

கன்றியகோணகேந்திர நகருளோராறெட்டாக
நின்றிடவீராறெட்டோர் நிற்கவேகேந்திரகோணம்
அன்றியமதியோடின ராயினுன்மாதேகேளாய்
சென்றிடச்செய்வதெல்லா நின்றிடாதிருக்குஞ்சீவன். (௫௫)

ஆயுள்காண்டம்-முற்றிற்று-ஆக-௩௯௮.

பிரதி அரிஷ்டகாண்டம்.

எட்டுடனெட்டுவிட்டி லிருந்தவன்பாபராகில்
மட்டுடன்சோமன்காரி மகிழ்ந்துடனவர்க்கேயேழிற்
பொட்டெனவிரவிநிற்கப் பொன்சுங்கனிவர்க்கோனிற்
கட்டுடனிருந்தாராகிற் கடினமாய்மரணமாமே. (௧)

எட்டவர்க்காறுவிட்டி லிருந்தவன்சனியேயாகிப்
பெட்டெனநான்கிற்செவ்வாய் பிரியமாய்நிற்கத்தானும்
மட்டறவிவர்க்கோன்சின் மன்னவனிரவிதிங்கள்
ஓட்டிறவாகநின்று லொருநாளின்மரணம்பிள்ளை. (௨)

பாம்புநின்றதற்குநான்கிற் பத்தியேசனியுநிற்கத்
தேம்புடனிவர்க்குட்பத்தில் வெய்யவன்சுங்கன்புந்தி
ஆமிடமிதற்கேயேழி லம்புசேர்செவ்வாய்நின்றாற்
காமபிளமூலையினுளே கடினமாய்ச்சாவுமுண்டே (௩)

மதிக்காறின்மந்தனிற்க மருவிடையிதற்கேயேழில்
அதிற்கோணமாகச்செவ்வா யமர்ந்துடனிருந்தானாகிற்
பதிக்காறிலிரவிபுந்தி பாங்குடன்சேர்ந்தேநிற்க
விதிக்காறுமாதந்தன்னில்விளைபுமேமரணமாக. (௪)

விதிபதிற்சனியேநிற்க விரிமுன்னிரவியின்சேய்
அதியதற்கைந்திற்பாம்பு மவருடன்மதியுநிற்கப்
பதியதற்கீராருகட் பருசுக்கனரசன்புந்தி
சதிரகமாகநின்றாற் சாவதுமெய்தான்மாதே. (௫

சோமனிருந்தவீட்டிற் சொல்லிடுஞ்சனியேநிற்கச்
சோமனார்வலமாயாறிற் றியருங்குருவுங்கங்கன்
பாமனரிவர்க்கேயெண்டிற் பனிபுந்திகூடிநிற்க
எமனார்கூடவந்திங் கெடுத்துடன்போவன்றானே. (௬)

எட்டவனிருந்தவீட்டி லிரவியும்பாம்புங்கூட
மட்டெனவவர்க்கேயேழின் மகிழ்ந்துடன்செவ்வாய்சேர
விட்டவனிடத்தின்மந்தன் விண்மதியிவர்க்கேயாறில்
மட்டெனசுபருமீச மாயினுக்குழவிசாமே. (௭)

தாழ்த்தியவெட்டோனீசத் சதிர்பின்ஞானஸ்தமிக்க
வாழ்த்தியவுதையத்தானும் வலமதுசெவ்வாய்கூட
வாழ்த்தியவரவங்காரி மதிக்கேழினின்றாராகிற்
போற்றியதனத்திற்கங்கன் புந்தியுநின்றாற்சாமே. (௮)

குருவினுக்கெட்டிற்காரி குருமதிக்காறிற்பாம்பு
பிறருக்குமாறிற்சேய்க்கும் பிறகிஞானஸ்தமிக்க
மருவொக்கப்புந்திமீச மகிழ்ச்சியில்லாமனிற்கக்
கருவற்றுப்போமேபிள்ளை கண்டெனுரைப்பாய்மாதே. (௯)

கதிருதையத்துக்கெட்டோன் கனக்கவேயுதையஞ்சேர
அதைச்சதிர்காரிசெவ்வா யமர்ந்துடனிருக்கத்தானும்
எதிரதிற்சுபரில்லாம லிருக்கினுமாதேகேளாய்
சதிரொருநாளுநில்லாச் சாவதுவருவதுண்டே. (௰)

அருக்கனுக்கெட்டோனேழி லதிற்சனிகூடிநிற்க
உருக்கமாயுதையத்தானு மொருமையாயஸ்தமிக்கப்
பெருக்கமாய்ச்சோமற்கெட்டோன் பின்புடன்மதியுஞ் சேர்ந்தால்
அருக்கமாய்ப்பிறந்தபிள்ளை யன்றிரவுதனிற்சாமே. (௧௧)

புந்திமதிசங்கன்கன்னி பொருந்தியநான்கின்மந்தன்
விந்தியபாபரெண்டில் வெய்யவன்விரையநிற்க
அந்தியுஞ்செவ்வாய்பத்தி லாறினிற்குருவேநின்றாற்
சந்தேகமில்லைமாதே சாவதுமுடனேயுண்டு. (௧௨)

செனித்தொருவளவிற்காரி சேர்ந்திடவரவங்கூட
இனிக்குருவேழினிற்க விவர்க்குநால்பூமன்சேரத்
தனித்தொருவீட்டில்வெய்யோன் றனக்கேழிற்சோமனின்றாற்
கனிக்கரமானபிள்ளை கண்டிருமாதுஞ்சாமே. (௧௩)

கரிமுகில்வண்ணன்காரி கதிரவனேழினிற்கப்
பிரியமாய்ப்புந்திக்கேழிற் பெருநாளன்சோமன்சேர
அரியதாய்க்குருவுக்கேழி லவ்வெள்ளிபூமனிற்கச்
சரியதாய்நிகழுமாகிற் சாவதுமுண்டுமோதே. (௧௪)

உதையமாமதிபனிரண்டாயினுமாறெட்டாயினுமே
இதையாதிபதிக்கேழினிற்சனி யொருவனுமேநிற்கச்
சிதையாமதியேழிடமாகவே சேரவும்பூமகனார்
வுதையாதியெவருமொரு குழவிமாண்டிடுமே. (௧௫)

மந்தனார்க்கிருபக்கங்கதிரோன்செவ்வாய் மகிழ்ந்துடனெட்டிலொருபாம்பேநிற்கத், தொந்தனுய்ச்சுக்கிரற்கேசனியேழாகிற்சுபருமேயிரவிவிடையின்னிடமதாக, வந்தனுருதைய துக்கதிபதிவருநீசமாகியேவிளையத்திடமதனில், அந்தகனார்புரமதின்மதிப்பாகவேயவிழ்ந்துகுழவிவருவதரிதாகவேபோய்விடுமே (௧௬)

ஆறெட்டுக்குடையோர்சேர்வு றம்புலிராஜன்சுங்கன்
மாறிட்டுமெட்டாருக மறுத்தங்கேகூடாராகிக்
கூறிட்டவுதையந்தன்னிற் குமிவிடைநிற்கத்தானும்
வேறிட்டுப்போமேபிள்ளை விவதோராண்டிரண்டில். (௧௭)

இரவிசுன்செவ்வாய்தானு மிருந்தொரின்னிடத்தார்சேர்ந்து
கருதுதையத்தினிற்கக் கனமதிநீனமானல்
அரவுமோருமிரெட்டாக வமர்ந்துடனிருந்தாராகில்
தரவுறும்பிள்ளையில்லாச் சாவதுகுழவிமாதே. (௧௮)

பகையோரைந்திலிவ்விடத்தாரு மிகையோர்நான்கிற்சேர்ந்திடவே
மிகையோர்நான்கினிடத்தாரு மேலெட்டாமிலிருக்கினுமே
வகையொருபொல்லாதொருவனுமே வந்துதையத்தினிலிடவே
நகைபருவத்தினிற்சேர்ந்திடுமே நமனுருலகனென்னுதலே (௧௯)

கண்டிட னுதயமுன்னும் பின்னுமாய்ச்சனிசேய்பாம்பும்
விண்டிடனின்றாகில் விண்மதிக்குருவுமெட்டில்
மொண்டுடன்சுங்கன்மூன்றின் முழுகதிர்நான்கினின்றாற்
கொண்டிடன்போவர்தூதர் குழவியைக்கூறுசெய்தே. (௨௰)

சுங்கனுக்கிராறெட்டிற் சூரியன்காரிசெவ்வாய்
அங்ஙனோராசனின்ற வதற்கெட்டிலரவநிற்கப்
பொங்கமாய்ச்சனிக்கோணத்திற் போயிருந்தவனுஞ்சோமன்
இங்கிதமாகநின்று மிவனுமோராண்டிற்சாவன் (௨௧)

ஏழுடனுதையம்பத்தி லிருக்கவேசனிசேய்நீயர்
வாழ்மதிநில்லோராண்டில் வருநவத்திடத்திருந்தால்
தாழ்வுடனரவுமெட்டிற் றளர்ந்திடாதிருந்தானகில்
வாழ்வுடன்கூடப்போமே வந்தநாளதனிற்சாகும். (௨௨)

கோணத்தார்சேர்வுற்றெட்டிற் கூடியேசனியுநிற்க
காணுத்தமதியும்வேந்த னிரண்டாகிநிற்கச்
சேணுற்றசெவ்வாய்றெண்டிற் செம்புள்ளிபாம்புநான்கிற்
காணுற்றுநின்றாராகிற் கருதியேகுழவிசாமே. (௨௩)

ஆதித்தன்காரிசோம னமர்ந்துடன்கூடிநிற்கக்
கோதித்துக்குருவுமெட்டிற் கோணமேயரவநிற்கச்
சாதித்துத்தனத்திற்செவ்வாய் சரியவருடனேசுங்கன்
வேதித்துநின்றாராகில் வீயுமேயாண்டிரண்டில்.

போமென்றுசொல்வாய்மாதே பூமனூர்சனியுமெட்டில்
ஆமென்றவிலக்கினத்தா னவனுமேயிரவிகூடில்
ஏனென்றவுதையந்தன்னி லெட்டவனிருக்கத்தானும்
காமென்றுசொல்லவேண்டா நமனதுகொண்டுபோமே. (௨௫)

போமென்றுசொல்லலாமே பிதுர்நவநீசமூடம்
ஆமென்றுசொல்லலாமே யந்தெட்டுக்கெட்டோனினம்
நாமென்றுசொல்லப்போமோ நன்மதிமகையுமாறுற்
சாமென்றுசொல்வாய்மாதே சார்ந்தோருகாளைப்பேறு (௨௬)

இந்தடவாகநின்று விதிக்குருபார்வையாகில்
வந்தடவாகிநின்று வழிபார்க்குமெமபுரத்தே
செந்தடவாயிச்சுங்கன் சென்மாதிபார்வையாகிற்
பொந்திடத்திருந்துமாதம் போய்விடுமென்றுசொல்லே (௨௭)

பிறையிறைசனியும்பாபி பிரியமாய்நிற்கக்கூட
நறைபிறப்பில்லாவெட்டோ னலங்குன்றியஸ்தமிக்க
இறைபிறந்ததியுங்கேந்திர கோணருநலமேயன்றித்
தரைபெறல்சொல்லலாமோ சாவதுநிஜமேமாதே. (௨௮)

புல்லதாய்ச்சனிக்கோன்கிற் பூமனூர்பலகத்தேநிற்க
ஒல்லையிலிரவிநான்கி லொருவர்கூடாமனின்றால்
மல்லதாய்ப்பிறையுந்தேய்ந்து மதிக்கெட்டி லுதயநின்றாற்
சொல்லலாஞ்சாகுமென்று துணிந்துடனுலகின்மாதே. (௨௯)

மறித்தொருசனியுநிற்க மற்றும்பொன்னஸ்தமிக்க
வெறித்தவன்சுங்கனிசம் வெய்யவன்மதிக்கேயெட்டிற்
பறித்தவன்பகையோர்சேர்ந்து பாம்புசெய்குதையனின்றாற்
குறித்துடன்சொல்வாய்மாதே குழவியுஞ்சாமேயென்று. (௩௰)

செறித்தலக்கினத்திநிசனுஞ் சென்மாதிபஸ்தமிக்கக்
குறித்தங்கேசனிபுமெட்டோன் கூடியேயுதையஞ்சேராக்
கறித்தொருசெவ்வாய்நான்கிற்கண்டிடிலேழிற்பாம்பு
மறித்துடனின்றானுகின் மாணமேகுழவிதானும். (௩௧)

சேராதபாவியோடே சென்மாதிகூடிநிற்கப்
பாராதநல்லோர்நின்று பனிமதிக்கெட்டாய்நிற்கக்
காராமனுதையத்தானுங் காரிசேய்க்கேழினிற்க
வாராதேவருமேதீம்பு வையகந்தன்னின்மாதே. (௩௨)

ஒருமையாய்க்காரிசெவ்வா யுதையத்திற்சேர்ந்துநிற்க
அருமையாய்ச்சோமனேழி லலரியுங்கூடநிற்கப்
பிரியமாய்நான்கிற்பாம்பு மிதற்கரசெட்டாறுநிற்
கரியதாம்பிள்ளைகூடக் கலந்துடன்சாமேமாதே. (௩௩)

பத்துடன்பத்துவீட்டிற் பதியவர்பதியாய்நிற்க
இத்துடன்கோணத்தாரு மிழிகுலமாயிருக்க
மத்துடனுதயமேழோன் மனமிடைந்தஸ்தமிக்கச்
செத்துடன்போமேபிள்ளை க்ஷீணசந்திரனுமானால் (௩௪)

விண்ணவர்பிறக்கிற்றீது விளையும்வாறேதோவென்னில்
நண்ணவர்சுகப்படாம னலக்கமாமதிப்பேயாகிக்
கண்ணவர்பாம்புஞ்சேயுங் கரியவனிவர்கள்சேரிற்
கொண்ணவர்காலாய்நிற்பர் கொடுங்கணைவிழியினுளே. (௩௫)

வையகத்துதித்தபேர்க்கு வருகின்றவரிட்டமெல்லாம்
பொய்பாவிரவிகாரி பூமனுநான்காய்க்கோணம்,
மெய்புரவாகினின்று மிகைத்தவர்க்காறெட்டாகிற்
கையறமாதநின்று கலங்குவர்புவியின்மாதே. (௩௬)

மன்னுளோர்பிறக்கிற்றீது வருவதுகேளாய்மாதே
நண்ணுளோர்கேந்திரகோண நகருளோராறெட்டாகக்
கண்ணுளவீராறெட்டோர் கதித்துநாற்கோணஞ்சேர்ந்தால்
என்னுளாக்கமுந்தப்பி யிருப்பதுமில்லைகண்டாய். (௩௭)

மாரணமேயெனச்சொல்லின மதியுமேசனிக்கேயெட்டில்
அருணனையரவந்தீண்டி லக்கணமிறப்புநோக்கி
இரணமாய்ப்போமேபிள்ளை யிருப்பதுபொய்தான்மாதே
அரணிலிலிருந்திட்டாலு மன்றிரவதனிற்சாவே. (௩௮)

தோஷநிவிர்த்தி;

சாவதுமெய்தான்சொல்வாய் சனிகெட்டிரவிநிற்க
ஆவதுகலையுயர்ந்த பூரணமதியைப்பாம்பு
காவதுநீட்டிப்பார்க்க நானிலத்துதிக்கானே
போவதுமெய்தான்சாவே பொல்லாதகெடுதிமாதே. (௩௯)

பூரணபெலத்திேனடு புண்ணியர்சுபமேயாகிற்
காரணமில்லைசாகக் களக்கவெவ்வபதாமுண்டு
சீரணமதியேயானுற் செல்வருந்தாழ்ந்துநிற்பர்
கூரணிப்பாபர்மேலாய்க் கொல்லுவர்கொஞ்சநாளில். (௪௰)

எட்டிரண்டுடனேசோம னீனமில்லாமனிற்க
விட்டொருபதினான்கேழுக் கினியவர்மேலாய்நிற்பர்
மட்டொருகலையினின்முன் மாறுமூக்கோணர்மேலோர்
தொட்டதுகுறிதான்பார்த்துச் சொல்லவும்வேண்டுமாதே (௪௧)

முன்மூன் றுபிறையிற்பொல்லா மூன்றுகோணத்தார்பொல்லார்
புன்மூன்றுபிறையிற்கேந்திரப் பதியரும்பொல்லாதாவர்
தன்னுறுபனிரண்டெட்டோர் சமனுகவிருப்பார்தாமும்
வன்காதலுள்ளமாதே வகையறிந்தெடுத்துச்சொல்லே. (௪௨)

பொல்லாதபாபர்நிற்கப் புகுந்திடப்புந்திதானும்
எல்லாருநலமேபாவ ரிருந்திடவிரவிநல்லோர்
சொல்லாதபகையேகொண்டு தோன்றியவயதுமட்டும்
இல்லாதுசொல்லப்போமோ விளங்கிள்ளைக்கினியமாதே. (௪௩)

உச்சமேயாகினல்லோ ரொருவேளைநீசமாகும்
அச்சமேபொல்லாதாகி யவருமேநீம்பாய்நிற்பர்
குச்சமேய்நீசமாகிற் கொள்துமோருச்சமுண்டே
மெச்சவேநல்லோராகி மேலாகிநிற்பர்மாதே. (௪௪)

ஆட்சியாய்நின்றபோர்க்குத் தாட்சியுங்கொஞ்சமுண்டு
தாட்சியாய்நின்றபோர்க்கிங் காட்சியுங்கொஞ்சமுண்டு
ஆட்சியைமகிழ்ந்துபார்த்துத் தாட்சியைத்தள்ளவேண்டாம்
சாட்சியாபூடுதாக்கிச் சரிப்படச்சொல்வாய்மாதே. (௪௫)

பகையென்றுசொன்னாற் சொல்லும்வகையிலேநல்லதாகும்
நகையென்றுசொன்னால்வந்து பகையாகநிற்குமாதே
மிகைவகைதெளிந்துபார்த்து மேதினிதனிலேநன்றாய்
வகைதொகையறியாதார்க்கு வருத்துணையினியமாதே. (௪௬)

ஆட்சிநட்புச்சமச மறியவேபகையுங்கூடச்
சாட்சியாயுதையங்கொண்டு சதிர்கோணமீராறெட்டும்
மாட்சியாய்லாபம்ரெண்டு மகிழ்ந்திதிலூடுதாக்கி
ஆட்சியாய்ப்பார்த்துச்சொன்னா லையமொன்றில்லைமாதே. (௪௭)

ஒன்பதுபேருநின்ற நிலைதனையூடுதாக்கி
இன்பமாய்ப்பார்த்தொன்றுக்கொன் றிருப்பதுகேந்திரகோணம்
தன்பதிக்கீராறெட்டிற் றனலாபமானோர்கொண்டு
பொன்பதியுதிக்கேபார்த்துப் போம்பலன்சொல்லலாமே. (௪அ)

காரியைப்பிடித்துப்பார்த்துக் கடுகவேவிதியைச்சொல்வாய்
சூரியன்றனைப்பிடித்துச் சொல்லுவாய்பலன்பிதூர்க்கு
வீரியபாம்பைப்பற்றி விளங்கவேயோகஞ்சொல்வாய்
சோர்விலாச்சுங்கன்றன்னாற் களத்திரபலனைச்சொல்லே (௪௯)

பூமனுடன்பிறப்பைப் போதவுமறிந்துசொல்வாய்
நாமனல்பேரும்புத்தி நல்கணக்கினியபுந்தி
தாமனார்முகத்தினாலே தையலேசொல்லக்கேளாய்
சோமனார்முதலாய்க்கொண்டு சொல்லவேவேண்டுமாதே. (௫௰)

மந்தன்பூமன்மதிக்கெட்டின் மற்றோர்குருவுஞ்சுங்கனுமே
வந்தங்கிருந்தவராவினுக்கும் வகையாயிரவிமதிக்கெட்டில்
நொந்தங்கிருந்தாற்சகலமுமே நேக்காடாகவிளையுமது
பந்தயங்கூறிச்சொன்னாலும் பலியாதிவர்க்குப்பகைவருமே. (௫௧)

எட்டோனிரவியாயினுமே மதிக்கெட்டாயிற்பகையாமே
கட்டாயமர்வுற்றெட்டினதற் கெட்டாயரசன்கூடினுமே
கெட்டோனரவமிருந்திடத்துக் கெட்டாய்சுங்கனிருக்கிலுமே
கெட்டோன்கெட்டாலப்போதுக் கிட்டுயிரிழந்துமாண்டிடுமே (௫

மட்டாய்ச்சுங்கன்மதிக்கெட்டின் மலர்ந்தேயரசன்விதிக்கெட்டி
எட்டாயிருந்தோனவர்க்கெட்டி லரவுபாம்புமிருந்திடவே
எட்டாய்ச்சனியர்க்கெட்டாகிற் குருபுத்தியைரவியும்விட்டாற்
சிட்டாய்ப்பதுக்கிடுங்குழவிச் செகமேலிருப்பார்க்குணமாதே(௫

இரவியாறெட்டிற் பொன்னவனிருக்கநோக்கப்
பரவியுயர்ந்தபிறைக்கே யிருநான்கிற்பாம்புநிற்க
அரவுகின்றவவ்வீட்டுக் காறெட்டமரச்சேய்சனியும்
மருவியிருக்குமதுவாகிற் செனித்தகுழவிமாண்டிடுமே. (௫௪)

உதையத்தாரு மிரவியுமதினிற்க
மதியொத்தசனிக்கே யிருநான்கின்மன்னவனும்
அதையத்தொரு நான்கிற்சேய்சுங்கன்
விதியத்துடனிருப்பது மிப்படியே. (௫௫)

உதையாதிபார்க்க வுபமதுகாணுதாகில்
மதியாகப்பிடித்துப்பார்க்க வண்மையுந்தெரியாதாகில்
இரகாதியாகப்பார்க்கக் கிடைத்திடு முள்ளதெல்லாம்
விதியாகச்சொல்வாய்மாதே வேறொருநினைவேயன்றி. (௫௬)

இப்படிச்சொல்லத்தக்க தெத்தனைகுழியோவென்னில்
நற்படியுதித்தோர்நல்ல நகரம்போற்கிரகம்போலச்
சொற்படிநன்முகூர்த்தஞ் சோபனமருவுஞ்சாந்தி
அப்படிப்பலனியாது மனையவுமதுவேயோகம். (௫௭)

சுபமதுசெய்யுங்கர்மஞ் சொற்றனம்வேறேவேண்டாம்
நிபமதிலட்சந்தோஷ நிறுத்துமேகிரககேந்திரம்
இபமதாய்ச்சுபங்களெல்லா மெத்திக்குமதுவேநன்று
உபமதுகேந்திரநல்லோ ருறுதியினதுதான்சொல்லே. (௫௮)

பிரதிஅரிஷ்டகாண்டம்-முற்றிற்று-ஆக-௪௫௬.

தனக்காண்டம்.

தனலர்பம்.

தனபாக்கியலாபமானோர் தாழ்விலாச்சுபரோசேர
மனையோக்கியமின்றிநல்ல மனையாட்சியுச்சமாக
இனசவுக்யமிலாப்பர்ப ரிவளாயேபாராராகில்
வினவுறுமாதேகேளாய் வேண்டியபொருளுண்டாமே. (௧)

கன்மாதிமுன்பின்னோருங் கலந்துடன்றனமேசேரச்
சென்மாதிதனத்தோன்கூடிச் சேர்ந்துடனிலாபஞ்சேர
மண்மாதினுதித்தோனில்லன் மனையிராறிரவிபாராப்
பெண்மானின்னையமானே பெருந்தனத்தவனுய்வாழ்வன். (௨)

தனத்தவனிடத்தான்லாபன் றனியராயவர்க்கேழ்பொன்னன்
சினத்துடனிலாபமானோர் சென்மாதிதனமேழாகக்

கனத்துடனிரவிபூமன் காரியுமாவனோக்கா
மனத்திடமாகநின்ருன் மகமேருகிரிபோல்வாழ்வன். (௩)
உத்தமனுதயங்கூடிச் சத்தமர்கஜேழினிற்க
நித்தமன்மனையோன்கூடிக் கெழ்மவர்க்கேழேயாகில்
இத்துடன்சனிசேய்திய ரிரவிபாம்பிவரைப்பாராப்
பெற்றவன்றவஷேயென்னப்பெருமையாய்ப்புவியில்வாழ்வன் ()
சுபர்கோணகேந்திறகேழ் சுற்றியேபாபரின்றி
அவர்கேந்திரகோணமானு ரம்மனைச்சுபரோசேர
இவர்க்கரிகாரிதீயு மிருந்திடமீராருகில்
எவரிதிற்பிறப்பானுலு மேந்திழைதனமுண்டாமே. (௫)
தனமதுபாக்கியலாபந் தலைவருமிருப்பிடத்து
மனமதுற்றைந்திலாறின் மந்தனுமாலேழாகி
இனமதுசுபர்நோக்கில்லா திருக்கினுமாகேகேளாய்
குணமதுதனமோசங் குறியிதுதப்பாதாமே. (௬)

தனநஷ்டம்.

பத்தொருவேழிரண்டோன் பாஸ்கரனுடனேகூடி
மற்றொருவிராறெட்டோர் மனையதிற்கூடினாலும்
சத்துருவுடனேகூடிச் சனிக்குநால்சயியுமாகி
மித்துருபார்வையின்றேல் மிகுதியுந்தனமோசம். (௭)
அஞ்சுமூன்றெட்டிற்காரி யாரலுமிரவிநிற்க
நஞ்சுபொன்சுங்கன்புந்தி நலமதிலிவரைப்பாராச்
செஞ்சுடர்க்கிரணன்பக்கல் சேர்ந்துடனுதையநின்றால்
மிஞ்சிடுபாக்கியமில்லை மிகத்தரித்திரமேயுண்டு. (௮)
எட்டொரிரண்டிலாப மிரவியுங்காரியாரல்
மட்டிடோராறெட்டாகி மதிகுருசுங்கனிற்க
விட்டிடோரிரவிக்கேழில் விடையுமேயுதையநின்றால்
இட்டொருநாளுமில்லா திவன்றனநாசமாமே. (௯)
உதையமூன்றெட்டிற்பாப ரோங்கிடவிலாபமுன்பின்
பதியவேமுன்பின்பற்றிப் பாபரோசிற்கக்கூட
மதியுமோரினனுகி மனமிடைந்திராறுகிற்
சிதையுமேதனமுநாசஞ் சீர்கேடனுகிவாழ்வன். (
தனத்தினிலிரவிநிற்கத் தனைமகன்றர்மமானுற்
செனித்தநான்மந்தனுகச் சென்மாதிக்கொருநால்புந்தி
மனத்திலைரவநிற்க மந்தனுக்கொருநான்காகில்
இனத்தினுற்றனமோச மிருமூன்றிற்சுங்கனுனல். (௰)

தனகாண்டம்-முற்றிற்று. ஆக-௪௧௭.

ரோக காண்டம்.

ரோகமின்மை.

செனித்தவன்மதியுநல்ல சேர்ந்திடஞ்சுபமேயாக
விதித்தவனெட்டாகி வெள்ளிபொன்னுதையமானாற்
குதித்தொருநாளும்ரோகங் கொண்டிடாதலகியோடும்
பதித்தவனுடனேசேரமன் பற்றினல்ரோகமில்லை. (௧)

உதித்தவிலக்கினத்துக் கோரிருபக்கநல்லோர்
மதித்தவற்றிடத்தினல்லோர் மன்னவன்பார்வையாகிற்
குதித்தநப்புரத்தேயோடிக் கூப்பிடும்ரோகமில்லை
செனித்திடத்திருந்தாற்சுங்கன் சேராதிரோகந்தானே. (௨)

மதிக்கிருபக்கநல்லோர் மன்னவனேழிலிற்க
உதித்தொருவிடத்திற்சுங்க னொருவனுமின்றானாகிற்
பதிக்கொருரோகமில்லைப் பண்டிதனாகிற்பன்
இதற்கொருரோகமின்றென் றேந்திழைமாதேசொல்வாய். (௩)

உதையாதிபதியைநல்லோ ரோங்கியேபார்ப்பாராகில்
இதையிருபக்கநல்லோ ரிருக்கிலும்பாபரின்றி
அதையுதிமதியுஞ்சேர்வுற் றவ்விடநலனேயாகிற்
சுதமதன்போலவாழ்வன் சொல்லுவாய்ரோகமில்லை. (௪)
